செய்தி வெளியீடு எண். 51 நாள்: 24.01.2018

**<u>தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக்கு விண்ணப்பித்தவர்கள் பயிற்சி வகுப்பில் கலந்துக்கொள்ளலாம் - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்</u>**

தமிழ்நாடு சீருடைப் பணியாளா் தோ்வுக் குழுமம் சாா்பில் இரண்டாம் நிலை காவலா் (ஆண், பெண்), மாநகர ஆயுதப்படை (ஆண், பெண்), இரண்டாம் நிலை சிறைக் காவலா் (ஆண், பெண்) மற்றும் தீயணைப்போா் ஆகிய பதவிகளுக்கான தோ்வு குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இத்தேர்வை எழுத உள்ளவர்களுக்காக திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் செயல்படும் தன்னார்வ பயிலும் வட்டம் சார்பாக இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளது. இப்பயிற்சி வகுப்புகள் வரும் பிப்ரவரி 1-ஆம் தேதி காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை அலுவலக வேலைநாட்களில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும், சனி மற்றும் ஞாயிறு விடுமுறை நாட்களில் கும்மிடிப்பூண்டி மற்றும் திருத்தணியிலும் நடத்தப்பட உள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் மேற்காணும் போட்டித் தேர்வுக்கு விண்ணப்பித்தவர்கள் தங்களது விருப்பத்தினை 30.01.2018-க்குள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலா், திருவள்ளூா் அவா்களிடம் தெரிவிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவா் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவா்கள் கேட்டுக்கொள்கிறாா்.

**<u>வெளியீடு</u> : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**